**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்**

**முன்னிலை: திரு.C. தினேஷ்குமார், B.A.LL.B(Hons)., LL.M.,**

**நீதித்துறை நடுவர் எண்.2 , திண்டுக்கல்**

**2026ம் ஆண்டு ஜூலை மாதம் 20ம் நாள் திங்கட்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 537/2012**

**CNR.No.TNDG03-000945-2012**

அரசுக்காக சார்பு ஆய்வாளர்,
நகர் வடக்கு காவல் நிலையம், திண்டுக்கல்,
குற்ற எண். 1255/2012
சட்டப்பிரிவுகள் 387 IPC ... குற்ற முறையிடுபவர்

/எதிர்/

தாஜ்முகமது (வயது 24/2012),
த/பெ. முகமது அலி,
வசந்த நகர், முதல் தெரு,
வேடசந்தூர் தாலுகா,
திண்டுக்கல்.

... எதிரி

**Case – Summary**

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case (C.C) No.537 of 2012 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by Inspector of Police, Town North PS. Dindigul in Cr.No.1255/2012 |
| 3. | Name of the accused | Taj Mohammed |
| 4. | Father’s Name | Mohammed Ali |
| 5. | Occupation | - |

<table>
<tr><td>6.</td><td>Residence</td><td colspan="3">Vasanth Nagar, First Street,<br>Vedasanthur Taluk, Dindigul.</td></tr>
<tr><td>7.</td><td>Age</td><td colspan="3">24/2012</td></tr>
<tr><td>8.</td><td>Date of occurrence</td><td colspan="3">16.11.2012 at about 09.15 hrs.</td></tr>
<tr><td>9.</td><td>Date of complaint<br>Date of filing Charge sheet</td><td colspan="3">16.11.2012<br>27.12.2012</td></tr>
<tr><td>10.</td><td>Date of apprehension</td><td colspan="3">16.11.2012</td></tr>
<tr><td>11.</td><td>Date of release on bail</td><td colspan="3">20.11.2012</td></tr>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td colspan="3">Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s. 207 Cr.P.C.</td><td colspan="3">06.07.2026</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 06.07.2026 the accused questioned on substance of accusation U/s.387 IPC. Accused denied as false case and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="3">15</td><td rowspan="3">Date of commencements of trial -The date of examination – in chief and cross-examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>13.07.2026</td><td>-</td></tr>
<tr><td>PW2</td><td>13.07.2026</td><td>13.07.2026</td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused under section 313 of the code – Closed of trial</td><td colspan="3">13.07.2026</td></tr>
<tr><td>17.</td><td>Sentence on order</td><td colspan="3">முடிவாக, எதிரி மீதான சட்டப்பிரிவு 387 இதச–ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால் எதிரியைக் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச பிரிவு 248(1) கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 18. | Service of copy of Judgment or finding on accused | No. The Judgment was uploaded on CIS portal and made available in E- Courts |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | No case property was seized and hence no property order passed. |

இவ்வழக்கு 27.12.2012ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் ஆண்டுபட்டிகை வழக்கு எண்.537/2012 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்ட எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.M.முனிஸ்வரி, B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பார்வையிட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

**I. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

1. அரசு தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 16.11.2012ம் தேதி காலை 09.15 மணிக்கு திண்டுக்கல் பஸ் நிலையம், நத்தம் பஸ் ரேக் அருகிலுள்ள கட்டணக் கழிப்பறை முன்பு இவ்வழக்கின் வாதி நின்றுகொண்டிருந்தபோது, இவ்வழக்கின் எதிரி வாதியிடம் கத்தியைக் காட்டி மிரட்டி, நான் இந்த ஏரியா ரவு எனக்கு ரூ.100/– மாமுல் கொடு இல்லையென்றால் குத்திவிடுவேன் என்று மிரட்டிய குற்றத்திற்காக எதிரி

மீது சட்டப்பிரிவு 387 இ.த.ச. வின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக அரசு தரப்பால் எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**II. வழக்கின் நகல்கள் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு குறித்து வினவுதல்:**

2. குற்ற இறுதி அறிக்கை பரிசீலனைக்கு பின் எதிரிக்கு எதிராக முகாந்திரம் இருந்ததால் இந்நீதிமன்றத்தால் மேற்படி எதிரிக்கு எதிராக இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நீதிமன்றத்திலிருந்து எதிரிக்கு இவ்வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பி அவர் முன்னிலை ஆனவுடன் வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் 06.07.2026 நாளன்று வழங்கப்பட்டு போதிய அவகாசம் வழங்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து எதிரி மீதான சட்டப்பிரிவு 387 இதச–ன் கீழான குற்றச்சாட்டின் சாராம்சத்தை விளக்கிக்கூறியபோது எதிரி குற்றத்தை மறுத்ததால் எதிரிக்கு எதிராக இதச பிரிவு 387–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் வாசித்து விளக்கிக்கூறிய போது எதிரி குற்றவாளி இல்லை என மறுத்ததால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**III) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :**

3. அரசு தரப்பில் மொத்தம் அ.சா1 மற்றும் அசா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான

சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட புகார்தாரர் தனது நீதிமன்ற சாட்சியத்தில், எதிரியைத் தெரியாது என்றும், கடந்த 15 வருடங்களுக்கு முன்பு சொந்த வேலை காரணமாக நகர் வடக்கு காவல் நிலையம் சென்றபோது போலிசார் எழுதிய தாளில் கையொப்பம் கேட்டுப் பெற்றுக்கொண்டார்கள் என்றும், வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட புலன் விசாரணை அதிகாரி தனது நீதிமன்ற சாட்சியத்தில், வழக்கின் புலன் விசாரணை அலுவலர் சார்பு ஆய்வாளர் நசீர் பாட்ஷா பணி ஓய்வு பெற்று சென்றுவிட்டதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 16.11.2012ம் தேதி த.கா. குமார் நிலைய பொறுப்பில் இருந்தபோது சிலுக்குவார்பட்டி ஆறுமுகம் மகன் வடிவேல் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சார்பு ஆய்வாளர் சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்துள்ளார் என்றும், பின்பு சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்பு எதிரியைக் கைது செய்து பாராவசம் ஒப்புவித்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், பின்பு தனது புலன் விசாரணை முடித்து எதிரி

மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலமாக அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**IV.எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவுதல்:**

6. அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரணை முடிவடைந்ததும், அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்களைப் பற்றி எதிரியிடம் குவிமுச 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவியபோது எதிரி அரசுத்தரப்பு சாட்சிகள் கூறுவது பொய் என்றும், அரசு தரப்பில் பொய் வழக்கு போட்டுள்ளதாகவும் கூறினார். தனது தரப்பில் சாட்சிகள் எதுவும் இல்லை என்று கூறினார்.

7. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**V.வாதுரைகள்**

**1. அரசுத்தரப்பு வாதம்**

8. அரசு தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், இவ்வழக்கில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மூலமும், ஆவணங்களில் இருந்தும் எதிரி மீதான சட்டப்பிரிவு 387 இதச–வின் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே

எதிரிக்கு தண்டனை வழங்கப்படவேண்டும் என அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார்.

**2. எதிரி தரப்பு வாதம்**

9. இதற்கு மாறாக எதிரி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், தனது வாதுரையில் எதிரி மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும், இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 புகார் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை வலியுறுத்தி சாட்சியம் அளிக்காமல், பிறழ் சாட்சியமளித்துள்ளார் என்றும், கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை என்றும், வழக்குச் சொத்தான கத்தியை புலன் விசாரணை அதிகாரியால் கைப்பற்றப்படவில்லை என்றும், அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

**VI. ஆய்விற்குரிய பிரச்சனை**

10. இருதரப்பு வாதத்தின் அடிப்படையிலும், வழக்கு கோப்பை பரிசீலனை செய்ததன் அடிப்படையிலும் இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீதான இ.த.ச பிரிவு 387–ன் படியான குற்றச்சாட்டை அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>VII) தீர்வு:</u>**

11. அரசு தரப்பானது, கடந்த 16.11.2012ம் தேதி காலை 09.15 மணிக்கு திண்டுக்கல் பஸ் நிலையம், நத்தம் பஸ் ரேக் அருகிலுள்ள கட்டணக் கழிப்பறை முன்பு இவ்வழக்கின் வாதி நின்றுகொண்டிருந்தபோது, இவ்வழக்கின் எதிரி வாதியிடம் கத்தியைக் காட்டி மிரட்டி, நான் இந்த ஏரியா ரவு எனக்கு ரூ.100/- மாமுல் கொடு இல்லையென்றால் குத்திவிடுவேன் என்று மிரட்டிய குற்றத்திற்காக எதிரி மீது சட்டப்பிரிவு 387 இ.த.ச. வின் கீழ் குற்றம் சாட்டியுள்ளது.

12. மேற்சொன்ன குற்றச்சாட்டை அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும்போது, இவ்வழக்கில் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட புகாரைப் பரிசீலனை செய்யும்போது, "16.11.2012ம் தேதி காலை 09.15 மணிக்கு திண்டுக்கல் பஸ் நிலையம் வந்து நத்தம் செல்வதற்காக நத்தம் பஸ் ரேக் அருகிலுள்ள கட்டண கழிப்பறை அருகே நின்றுகொண்டு இருக்கும்போது சுமார் 25 வயது மதிக்கத்தக்க ஒருவன் என் அருகில் வந்து நின்றுகொண்டு கத்தியைக் காட்டி மிரட்டி நான் இந்த ஏரியா ரவுடி எனக்கு நூறு ரூபாய் மாமுல் கொடு இல்லையென்றால் உன்னை குத்திவிடுவேன் என்று மிரட்டினான்" என்று புகார்தாரர் புகார் அளித்துள்ளார். மேலும், இவ்வழக்கில் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையைப் பரிசீலனை செய்யும்போது மேற்சொன்ன சங்கதிகள் இடம் பெற்றுள்ளன.

13. ஆனால், அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட புகார்தாரர் தனது முதல் விசாரணையில் "ஆஜர் எதிரியைத் தெரியாது. கடந்த 15 வருடங்களுக்கு

முன்பு தேதி மாதம் நினைவில் இல்லை, சொந்தவேலை காரணமாக நகர் வடக்கு காவல் நிலையம் சென்றபோது, போலிசார் எழுதிய தாளில் கையொப்பம் கேட்டுப் பெற்றுக்கொண்டார்கள். வழக்கு பற்றி எதுவும் தெரியாது" என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். ஆகவே, புகார்தாரர் புகாரில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் புகாரின் உண்மைத் தன்மையில் இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுந்துள்ளது.

14. மேலும், இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்ட மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் ஆகியவற்றைப் பரிசீலனை செய்யும்போது, சம்பவ இடமானது பொதுமக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதி என்று தெரிய வருகிறது. இருந்தபோதிலும், இவ்வழக்கில் வேறு எந்த கண்ணுற்ற சாட்சிகளோ அல்லது பொதுமக்களோ சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்டு அரசு தரப்பு வழக்கிற்கு உறுதியூட்டும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை.

15. மேலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி, எதிரி தான் மேற்படி குற்றச்செயலில் ஈடுபட்டார் என்பதை உறுதியூட்டும் வகையில் எந்தவிதமான சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும், இவ்வழக்கில் எதிரி புகார்தாரரை மிரட்டுவதற்கு பயன்படுத்தியதாக சொல்லப்படும் கத்தியை புலன் விசாரணை அதிகாரி கைப்பற்றி இந்நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை. மேலும், இவ்வழக்கின் புகார்தாரர் வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளபோது, இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை வைத்து மட்டுமே எதிரி குற்றச்

செயலில் ஈடுபட்டதாக கருத இயலாது. எதிரியின் மீதான குற்றச்சாட்டை உறுதிப்படுத்தும் விதமாக சாட்சியங்களை முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

16. ஆகவே, எதிரி இவ்வழக்கின் வாதியிடம் பணம் கேட்டு கத்தியைக் காட்டி மிரட்டினார் என்பதை அரசு தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

17. முடிவாக, எதிரி மீதான சட்டப்பிரிவு 387 இதச–ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால் எதிரியைக் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச பிரிவு 248(1) கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

18. இந்த வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் சொத்து பற்றிய உத்தரவு ஏதுமில்லை.

19. இவ்வழக்கின் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால், மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக பெறப்பட்ட கு.வி.மு.ச. 437(A) பிணைப்பத்திரமானது 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என்றும் பின்னர் தானாக இரத்தாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026ம் ஆண்டு ஜூலை மாதம் 20–ம் நாள் திங்கட்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.07.20 15:49:55 +0530

நீதித்துறை நடுவர் எண்.II
திண்டுக்கல்.

**I. அரசு தரப்பு சாட்சிகள்**

| Sl. No. | Examined as | Name of Witness | Date of examination | Exhibits Marked |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.1 | வடிவேல் த/பெ.ஆறுமுகம் | 13.07.2026 | அ.சா.ஆ.1 |
| 2. | அ.சா.2 | மாரிமுத்து (சிறப்பு சார்பு ஆய்வாளர்) | 13.07.2026 | அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.4 |

**II. அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| Sl. No. | Exhibits | Marked through | Date of Document | Description of document |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | அ.சா.1 | 16.11.2012 | புகார் |
| 2. | அ.சா.ஆ.2 | அ.சா.2 | 16.11.2012 | முதல் தகவல் அறிக்கை |
| 3. | அ.சா.ஆ.3 | அ.சா.2 | 16.11.2012 | மாதிரி வரைபடம் |
| 4. | அ.சா.ஆ.4 | அ.சா.2 | 16.11.2012 | பார்வை மகஜர் |

**III. அரசு தரப்பு சான்றுப் பொருள்கள்** – இல்லை

**IV. எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருள்கள்** – இல்லை

DINESH KUMAR C Digitally signed by DINESH KUMAR C Date: 2026.07.20 15:50:03 +0530

நீதித்துறை நடுவர் எண்.II
திண்டுக்கல்.

**குறிப்பு :**

1. வழக்கின் முடிவு இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்
3. எந்த சாட்சிகளும் 3 முறைக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.